# மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்

# அசல் வழக்கு எண்.19/14

2019 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28-ம் நாள் வியாழன் கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.2 மனோகரன் என்பவரது குறுக்கு விசாரணை, திருமதி.பழனியம்மாள், பெஞ்ச் கிளர்க் கிரேடு -1 என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை 4,5 மற்றும் 7வது பிரதிவாதிகள் தரப்பில்**

எங்களுடைய ரெட்டியார் நல சங்கத்தில் 1வது பிரதிவாதி சின்னராஜ் ஒரு உறுப்பினர் தான் என்றால் சரி. எனக்கும் சின்னராஜிக்கும் 15 வருடமாக பேச்சுவார்த்தை இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கு அருகில் எனக்கு சொத்து உள்ளது. சொத்து இருப்பதை நிருபிக்க நீதிமன்றத்தில் ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 4 நபர்களின் பெயரில் கூட்டு பட்டாவாக உள்ளது. அவ்வாறு வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அவகாசம் கொடுத்தால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். சின்னராஜ் ஊர் விவகாரங்களில் ஈடுபட்டு கோர்ட், கேஸ் என்று அலைவார் என்பதை பிறர் சொல்லி தான் கேள்விபட்டேன். எனக்கு நேரடியாக தெரியாது. சிவகுமாரை வெளிநாட்டுக்கு அனுப்ப குணசேகரன் கடன் வாங்கி தான் அனுப்பி வைத்தார். மேற்கண்ட விவரங்களை நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் கேட்டால் சொல்லியிருப்பேன், கேட்கவில்லை அதனால் சொல்லவில்லை. குணசேகரன் தானிய வியாபாரம் செய்தது பற்றி எனக்கு நேடியாக தெரியாது என்றால் தெரியும். குணசேகரன் வியாபாரத்திற்காக முழு முதலீடு செய்து தான் வியாபாரம் செய்து வருகிறார். இந்த விவரத்தை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. அவ்வாறு வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. குணசேகரன் படித்து உள்ளார் என்றால் அவர் 4,5 வது படித்து இருக்கலாம். கையெழுத்து மட்டும் போடுவார். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குணசேகரன் படிக்கவில்லை என்று

சொல்லியிருந்தால் அது தான் சரியானது. 4,5 வது படித்ததாக நான் சொல்லியது யூகத்தின் அடிப்படையில் ஆகும். குணசேகரன் 4,5 வது பவித்திரம் கிராமத்தில் படித்துள்ளார் என்றாலும் அது தெரிந்து தான் நான் முதலில் அவ்வாறு சாட்சியளித்துள்ளேன் என்றால் சரியல்ல. யூகத்தின் அடிப்படையில் சொல்வதாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி தற்போது உள்ளூரில் இல்லை, சென்னையில் குடியிருக்கிறார். இங்கு வந்து செல்வார். 4ம் பிரதிவாதி எங்களுக்குரிய சொத்துப் பிரச்சினையை சமாதானமாக பேசி முடிக்க சொல்லி என்னை அணுகினார் என்று நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி ரெட்டியார் நல சங்கத்தில் உறுப்பினராக உள்ள நிலையில் அவருக்கு தெரியாமல் சமாதானம் பேசபட்டதா என்றால் சிவகுமார், குணசேகரன் இருவரும் வந்தார்கள். சிவகுமார் அவருடைய அப்பாவிற்கு பொறுப்பு ஏற்றுக்கொண்டார். சிவகுமார், குணசேகரன் இருவரும் அவருடைய அப்பாவிற்கு பொறுப்பு ஏற்றுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல சமாதான பேச்சுவார்த்தையே நடக்கவில்லை என்றாலும் நான் எந்தவிதமான சமாதான பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்றாலும் சரியல்ல. ஊரில் மற்றவர்கள் சமாதான பேச்சுவார்த்தை நடத்தியவர்கள் இருக்கிறார்கள். இந்த விவரத்தை என்னுடைய முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் சொல்லவில்லை என்றால் சரி. எங்கள் நல சங்கத்தில் அழைத்து சமாதானம் பேசினார்கள். நல சங்கத்தின் பொறுப்பாளர்கள் சமாதானம் பேசினார்கள். சிவகுமார் சமாதானம் பேச்சுவார்த்தைக்கு ஒத்துவரவில்லை என்று நான் கூறுவது தவறு என்றாலும் சமாதானமே நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள விவரங்கள் பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கு பக்கத்தில் எந்தவித சொத்துக்களும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிகளுக்கும் எந்தவித பேச்சுவார்த்தையும் கிடையாது என்றால் சரியல்ல. எனக்கும் சின்னராஜிக்கும் நீண்ட நாட்களுக்கு முன்பே மன வருத்தம் ஏற்பட்டது என்றாலும் அந்த மன வருத்தத்தில் தான் வாதியை பற்றி நல்லவிதமாகவும் பிரதிவாதிகளை தவறாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. சிவகுமார் சமாதான பேச்சுவார்த்தைக்கு அணுகவில்லை என்றாலும்

நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எல்லாம் கிரைய சொத்துக்கள் என்றாலும் பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றாலும் சரியல்ல தாவா சொத்துக்களை கிரையம் வாங்கியது சம்பந்தமாக வாதி குணசேகரன் எந்தவித பங்களிப்பும் செய்யவில்லை என்றால் ஞாபகமில்லை. எனக்கு வழக்கு பற்றி எந்தவித விவரமும் தெரியாது என்றாலும் சொன்ன விவரங்கள் தவறானவை என்றாலும் சரியல்ல. அதனால் என்னுடைய வாக்குமூலம் ஏற்றுகொள்ள முடியாது என்றாலும் சரியல்ல.